**கவனிக்க.**- 2007.06.15 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி II மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1503 - 2007 ජූනි 22 වැනි සිකුරාදා - 2007.06.22

1503 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 478 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 479 |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 480 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, யூன் 29 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, யூன் 15 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் – மல்லாகம்

உரிமைகோராத சான்றுப் பொருட்களான நகை ஏலவிற்பனை – வழக்கு இல. ஏ 121/02

உரிமைகோரப்படாத கீழக்காணும் நகைகள், 2007.07.21 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நீதிவான் நீதிமன்றம், மல்லாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

1. நீதிமன்ற நீதிபதியின் மேற்பார்வையின்கீழ் ஏலவிற்பனை நடாத்தப்படும். ஏலவிற்பனை நிபந்தனைகள் தொடர்பான முடிவு நீதிபதி அவர்களின் இறுதி முடிவாக இருந்து வரும்.

2. நகையைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கும் எடையை நிறுவை செய்து பார்ப்பதற்கும் உரிய ஒழுங்குகள் செய்யப்படும்.

3. நகைகளை விற்பனை செய்வதற்கு முன்னர் அவற்றைக் கோருபவர்களுக்குத் தேவைப்படின் நகைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கும் நிறுவை செய்து பார்ப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

4. நகையைக் கொள்வனவு செய்பவர்கள் அவற்றின் நிறை, தரம் நிபந்தனையில் உள்ள ஏதாவது வேறுபாட்டுக்கு பொருளை வாங்கிய பின்னர் ஏற்றுக்கொண்டவராகக் கருதப்படுவார்.

5. ஏலவிற்பனையின் இறுதி விலை முடிக்கப்படும் போது கேட்கப்பட்ட ஆகக்கூடிய விலையின் பிரகாரம் கேட்போர் எவரோ அவருக்கு நகை மொத்தப்பணத்தை ஒரே நேரத்தில் ரொக்கமாகச் செலுத்தும்பட்சத்தில் விற்கப்படும்.

6. நகை கொள்வனவு செய்பவர்கள் தமது முழுப்பெயர், நிரந்தர முகவரி, தே. அ. அ. இலக்கம் என்பவற்றை நகையைக் கொள்வனவு செய்யும்போதே மன்றுக்கு வழங்க வேண்டும். இதற்கமைவாக நீதிமன்ற பதிவாளரினால் பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

7. விற்பனை செய்யப்பட்ட நகைகள் எவையும் இம்மன்றினால் மீளப் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8. ஏலவிற்பனை நடைபெறும்போது எந்த ஒரு பவுண் பொருளையும் விற்பனைக்கு முன்னரோ அல்லது விற்பனை நடந்துகொண்டிருக்கும் போதோ காரணம் காட்டாது ஏலவிற்பனையிலிருந்து விலக்கிவிட இம்மன்று முழு உருத்தையும் உடையது.

9. ஏற்கனவே ஒரு நகை உடைய பெறுமதி சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் குறைந்த விலைக்கு எப்பொருளும் விற்பனை செய்யப்படமாட்டாது. மேலும் ஒரு பொருள் விற்பனை செய்யப்படும்போது அப்பொருளுக்கான மதிப்பீட்டுச் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலை பொது மக்களுக்கு அறிவிக்கப்படும்.

(திருமதி) ச. இளங்கோவன்,
மாவட்ட நீதிபதிவான்,
மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
மல்லாகம்.

பிரதி : 1. செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு, கொழும்பு 12.
2. செயலாளர், நீதியமைச்சு, கொழும்பு 12.

### சான்றுப்பொருள் ஏலவிற்பனை – நீதிவான் நீதிமன்றம், மல்லாகம்

| தொடர் இல. | வழக்கு இல. | ரகம் | விபரம் (நிறை) | பதிவு இல. | தீர்ப்பு வழங்கப் பட்ட திகதி |
|---|---|---|---|---|---|
| 1. | ஏ 121/02 | பவுண் சங்கிலி | 19.70 கி | – | 2002.04.01 |
| 2. | ஏ 121/02 | பவுண் நெக்லஸ் | 24.62 கி | – | 2002.04.01 |

| *தொடர் இல.* | *வழக்கு இல.* | *ரகம்* | *விபரம் (நிறை)* | *பதிவு இல.* | *தீர்ப்பு வழங்கப் பட்ட திகதி* |
|---|---|---|---|---|---|
| 3. | ஏ 121/02 | பவுண் நெக்லஸ் | 18.32 கி | - | 2002.04.01 |
| 4. | ஏ 121/02 | பவுண் சங்கிலி | 7.70 கி | - | 2002.04.01 |
| 5. | ஏ 121/02 | பவுண் மோதிரம் | 18.70 கி | - | 2002.04.01 |
| 6. | ஏ 121/02 | பவுண் மாதிரம் | 3.45 கி | - | 2002.04.01 |
| 7. | ஏ 121/02 | பவுண் மோதிரம் | 4.80 கி | - | 2002.04.01 |
| 8. | ஏ 121/02 | பவுண் சிறிய மோதிரம் | 1.00 கி | - | 2002.04.01 |
| 9. | ஏ 121/02 | பவுண் குழந்தை மோதிரம் | 0.75 கி | - | 2002.04.01 |
| 10. | ஏ 121/02 | பவுண் மோதிரம் (சிவப்பு) | 1.00 கி | - | 2002.04.01 |
| 11. | ஏ 121/02 | பவுண் மோதிரம் | 3.30 கி | - | 2002.04.01 |
| 12. | ஏ 121/02 | பவுண் மோதிரம் | 1.20 கி | - | 2002.04.01 |
| 13. | ஏ 121/02 | காது தோடு (2) | 9.90 கி | - | 2002.04.01 |
| 14. | ஏ 121/02 | காது தோடு (2) | 5.70 கி | - | 2002.04.01 |
| 15. | ஏ 121/02 | காது தோடு (2) | 9.40 கி | - | 2002.04.01 |
| 16. | ஏ 121/02 | சிறிய தோடு (2) | 3.30 கி | - | 2002.04.01 |
| 17. | ஏ 121/02 | பென்ரன் | 7.50 கி | - | 2002.04.01 |
| 18. | ஏ 121/02 | பென்ரன் | 1.30 கி | - | 2002.04.01 |
| 19. | ஏ 121/02 | மோதிரம் | 1.80 கி | - | 2002.04.01 |
| 20. | ஏ 121/02 | கல் பதித்த பென்ரன் | 3.80 கி | - | 2002.04.01 |
| 21. | ஏ 121/02 | காப்பு (2) | 15.80 கி | - | 2002.04.01 |
| 22. | ஏ 121/02 | காப்பு (1) | 2.50 கி | - | 2002.04.01 |
| 23. | ஏ 121/02 | காப்பு (2) போலி | - | - | |

6-413

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 8 (2) இன் விதிகளின் கீழ் 2007, மே 9 ஆந் திகதி தொடக்கம்-*கம்பனியின் முன்னைய பெயர் :* COMMERCIAL FUND MANAGEMENT (PRIVATE) LIMITED *கம்பனி இலக்கம் :* N(PVS)8612. *கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசம் :* இல. 10, 5 ஆவது மாடி, மெஜெஸ்டிக் சிட்டி, கொழும்பு 4.

*கம்பனியின் புதிய பெயர் :* CT Fund Management (Pvt.) Limited.

செயலாளர்கள்,
பிஸ்நஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
(Businessmate (Private) Limited).

இல. 45, பிரேபுரூக் வீதி,
கொழும்பு 2,
2007, யூன் 3.

6-473

# ஏல விற்பனைகள்

## தேசிய சேமிப்பு வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் கீழான விற்பனை*

**தேசிய சேமிப்பு வங்கிக்கு சொந்தமான ஆதனத்தின் ஏல விற்பனை**

**(மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் ஹேவாகம் கோறளை மெதபற்றுவின் ஹோமாகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மடுலுவவவில் அமைந்துள்ள நில்வங்கல எஸ்டேட் என அழைக்கப்படும் காணியின் 1998.10.14 ஆந் திகதியிட்ட 2169 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட 10 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ள துண்டு 09 என அடையாளமிடப்பட்ட பெறுமதிமிக்க காணித்துண்டின் ஏல விற்பனை**

*(இல. 118 சீகோ கார்டன்ஸ் கடபுமன, பிலியந்தலவைச் சேர்ந்த திரு. எம். எம். ஆர். காமில் என்பவரால் இவ் ஆதனம் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ளது.)*

இவ்வாதனம் பகிரங்க ஏலமூலம் 2007, யூலை மாதம் 18 ஆந் திகதி புதன் கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாக அதே இடத்தில் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தின் விவரணம்.-** மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை மெதபற்றுவின் ஹோமாகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மடுலுவவவில் அமைந்துள்ள நில்வங்கல எஸ்டேட் உம் அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாகவும். உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. எம். ஏ. ஜெயரட்ணவினால் ஆக்கப்பட்ட 1998.10.14 ஆந் திகதியிட்ட 2169 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 09 என அடையாளமிடப்பட்டதும் வடக்கில் : துண்டு 10ஐயும் ; கிழக்கில் துண்டு 17 ஐயும் ; தெற்கில் : துண்டு 8 ஐயும் ; மேற்கில் : டி. யூ. ஜயசூரியவின் ஆதனத்தையும் எல்லைகளாகக் கொண்டதும் சொல்லப்பட்ட 2169 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய பத்து பேர்ச்சஸ்(0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணமுள்ளதும் அவிசாவளை காணிப்பதிவகத்தில் பகுதி / கோவை என் 215/ 190 இல் பதிவு செய்யப்பட்டதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும்.

மேலே சொல்லப்பட்ட 2169 ஆம் இலக்க வரைபடத்திற்காட்டப்பட்ட துண்டு 60 என அடையாளமிடப்பட்ட (நலன்புரி நோக்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட) தும் 2169 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 17 (20, அகல) எனும் பாதை ஒதுக்கும் மற்றும் ஏனைய சகல பாதை உரித்துக்களும் உள்ளடங்கலாக.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.-** ஹோமாகமவிலிருந்து வீதி வழியாக அவிசாவளை நோக்கி 3 கி. மி. வரை கொடகம சந்திவரை சென்று வலது பக்கமாக பாதுக்க வீதிக்கு திரும்பி வட்டரேக புரையிரத நிலைய சந்திவரை 03 கி. மீற்றர் செல்லவும். பின்னர் வலது பக்கமாக ஹொருகொல்ல வீதியில் திரும்பி மடுலுவாவ சந்திக்கு 02.5 கிலோ மீற்றர் வரை சென்று வலது பக்கம் கலவல வீதிக்கு திரும்பி மேலும் 250 மீற்றர் முன் சென்று மீண்டும் வலது பக்கம் திரும்பி மற்றுமொரு பொது மண்பாதையில் 200 மீற்றர் சென்று வலது பக்கமாகவுள்ள காணியை அடையலாம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.-** ஏலத்தைப் பெற்ற கொள்வனவுகாரர் விற்பனை முடிந்தவுடன் பின்வரும் தொகைகளை ஒவ்வொரு ஆதனத்தின் பேரிலும் காசாகக் கொடுக்க வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 25% ;

(2) பிரதேச சபைக்கு வரியாகக் கொள்வனவு விலையின் 1% ;

(3) ஏலதாரரின் தரகாக விற்பனை விலையின் 2 1/2% ;

(4) மொத்த விளம்பரச் செலவாக ரூபா 88,011 ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுபவரின் கட்டணமாக ரூபா 500 ;

(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்துவதற்காக நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 3,000.

(7) விற்பனை நிபந்தனைச் செலவாக ரூ. 750

கொள்வனவு விலையின் மீதி 75% விற்பனைத் தேதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள்ளாக வங்கிக்கு செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களையும் விற்பனை நிபந்தனைகளையும் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டியவர் :

உதவிப் பொது முகாமையாளர் (கடன்), தேசிய சேமிப்பு வங்கி, இல. 255, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி : 011-2576132.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
பட்டய ஏலதாரர்களும், இலங்கையின்
அரச தனியார்துறை வங்கிகளதும்
மதிப்பீட்டாளர்களும் நீதிமன்றத் தரகர்களும்.

| | |
|---|---|
| நகர அலுவலகம் : | தலைமை அலுவலகம் : |
| 290, ஹவ்லொக் றோட், | 24, டொரிங்டன் வீதி, |
| கொழும்பு 05. | கண்டி. |
| தொலைபேசி 94 (0) 11-2585408, -2502680 | தொலைபேசி :081-2224371, 081-2227593 |
| தொலைநகல்: 94 (0) 11-2588176, | தொலைநகல் :081-2224371 |
| மின் அஞ்சல் : sameera@sri.lanka.net | மின் அஞ்சல் : sameera@diamond.lanka.net |

6-372

## தேசிய சேமிப்பு வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் கீழான விற்பனை*

**தேசிய சேமிப்பு வங்கிக்கு சொந்தமான ஆதனத்தின் ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் ஹோமாகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சல்பிட்டி கோறளை உடகஹபற்றுவின் கஹதுடுவவில் அமைந்துள்ள ஹீட்டாவல டெனியா என்றும் ஒபடடெனிய என்றும் அழைக்கப்படும் காணியும் 1997.03.26 ஆந் திகதியிட்ட 1163 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட 10 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ள துண்டு 34 என அடையாளமிடப்பட்டதுமான பெறுமதிமிக்க காணித்துண்டு**

**ஆதனத்தின் விவரணம்.-** மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளை உடகஹபற்று ஹோமாகம பிரதேச சபையின் வெடரா உப அலுவலக எல்லைக்குட்பட்ட கஹதுடுவவில் அமைந்துள்ள ஹீட்டாவல டெனியா என்றும் ஒபடடெனிய என்றும் அழைக்கப்படும் காணியும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. எஸ். எல். பி. சத்தரசிங்கவினால் ஆக்கப்பட்ட 1997.03.26 ஆந் திகதியிட்ட 1163 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 34 என அடையாளமிடப்பட்டதும்- வடக்கில் : துண்டு ஆர் 5 (20 அடி அகல பாதை ஒதுக்கு) ஐயும் ; கிழக்கில் துண்டு 33 ஐயும் ; தெற்கில் : துண்டு 32, துண்டு ஆர் 10 (கால்வாய்) ஐயும் ; மேற்கில் : துண்டு 35 ஐயும் எல்லைகளாகக் கொண்டதும் சொல்லப்பட்ட 1163 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய பத்து பேர்ச்சஸ்(0ஏ. 0றூ. 10பே.) கொண்டதும் அங்குள்ள கட்டிடம், மரங்கள், பயிர்கள் மற்றும் அதில் நிற்கும் அனைத்தும் உ ள்ளடங்கலாகவும் கொழும்பு காணிப்பதிவகத்தில் கோவை என் 253/276 இல் பதிவு செய்யப்பட்டதுமான (தற்போது ஹோமாகம காணிப்பதிவு) பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும்.

மேலே சொல்லப்பட்ட 1163 ஆம் இலக்க வரைபடத்திற்காட்டப்பட்ட துண்டுகள் ஆர் 3, ஆர் 5 இன் மேலாகவும் ஊடாகவும் செல்வதற்கான பாதை ஒதுக்கும் உள்ளடங்கலாக.

ஜயதிலக்க வத்த முனகம, ஹொரணையைச் சேர்ந்த திரு. கே. ஆர். கே. நாவின்னவினால் இவ் ஆதனம் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளது.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.-** கொழும்பு ஹொரண வீதியில் ஏறக்குறைய 25. கி. மீ. வரை சென்று 250 மீற்றர் தூரத்தில் கஹதுடுவ சந்தியில் இருந்து இந்து லங்கா ஸ்ரீல் தொழிற்சாலையின் இடது பக்கம் திரும்பி ஹோமாகம நோக்கி 1 1/2 கி. மீ. வரை சென்று (சடாதென்ன பெயர் பலகை) இடது பக்கமாக கி. ச. வீதிக்கு திரும்பி, “டெவலப்மன்ட் பிளான்” இற்கு 40 மீற்றர் வரை சென்று வலது பக்கம் திரும்பி 20 அடி அகல பாதை ஒதுக்கில் 125 மீற்றர் வரை சென்று இறுதியாக இடது பக்கமாக திரும்பி 10 மீற்றர் சென்று இடது பக்கத்தில் ஆதனத்தை அடையலாம்.

இவ்வாதனம் பகிரங்க ஏலமூலம் 2007, யூலை மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாக அதே இடத்தில் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.-** ஏலத்தைப் பெற்ற கொள்வனவுகாரர் விற்பனை முடிந்தவுடன் பின்வரும் தொகைகளை ஒவ்வொரு ஆதனத்தின் பேரிலும் காசாகக் கொடுக்க வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 25% ;

(2) பிரதேச சபைக்கு வரியாகக் கொள்வனவு விலையின் 1% ;

(3) ஏலதாரர் தரகாக விற்பனை விலையின் 2 1/2% ;

(4) மொத்த விளம்பரச் செலவாக ரூபா 90,697 ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுபவரின் கட்டணமாக ரூபா 500 ;

(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்துவதற்காக நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 3,000.

(7) விற்பனை நிபந்தனைச் செலவாக ரூபா 750.

கொள்வனவு விலையின் மீதி 75% விற்பனைத் தேதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள்ளாக வங்கிக்கு செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களையும் விற்பனை நிபந்தனைகளையும் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டியவர் :

உதவிப் பொது முகாமையாளர் (கடன்), தேசிய சேமிப்பு வங்கி, இல. 255, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி : 011-2576132.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
பட்டய ஏலதாரர்களும், இலங்கையின் அரச,
தனியார் துறை வங்கிகளதும் மதிப்பீட்டாளர்களும்,
நீதிமன்ற தரகர்களும்.

| நகர அலுவலகம் : | தலைமை அலுவலகமும்/ காட்சியறையும் : |
|---|---|
| 290 ஹவ்லொக் றோட், கொழும்பு 05. | 24, டொரிங்டன் வீதி, கண்டி. |
| தொலைபேசி 94 (0) 11-2585408, -2502680 | தொலைபேசி :081-2224371, 081-2227593 |
| தொலைநகல்: 94 (0) 11-2588176, | தொலைநகல் :081-2224371 |
| மின் அஞ்சல் : sameera@sri.lanka.net | மின் அஞ்சல் : sameera@diamond.lanka.net |

6-371